பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

முரசொலி

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.டி

மலர் : 16] சென்னை : புரட்டாசி 28 (14—10—68) திங்கள் ★ வெளியூர் : புரட்டாசி 29 (15—10—68) செவ்வாய் [இதழ் : 98

சீனாவின் மக்கட் தொகை

ஹராங்காங், அக். 13—1958-ஆம் ஆண்டைக் கணக்கெடுப்பில் 58 கோடியே 30 இலட்சமாக இருந்த செஞ்சீனாவின் மக்கட் தொகை, இப்போது 71 கோடியே 30 இலட்சமாகப் பெருகியிருக்க வேண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கடைசியாக 1967 செப்டம்பருக்கு முன்பிருந்து இவ்வாண்டு செப்டம்பர் வரை சீன வானுளி அறிவித்த புள்ளிவிவரத்தின் அடிப்படையில் உலக மக்கட் தொகையில் கால் பங்கினர் சீனாவில் வசிக்கின்றனர் என்று மதிப்பிடப்படுகிறது.

மாநில விவகாரத்தில் டில்லி தலையீடு

பொருளாதார முன்னேற்றத்துக்கு மூட்டுக்கட்டை

முன்னாள் மத்திய அமைச்சர் குற்றச்சாட்டு

ஆமதாபாத், அக். 13—

"மாநில அரசுகளுக்குப் பொருளாதாரச் சுதந்தரம் இருக்க வேண்டும்.

"மாநில அரசுகளின் விவகாரங்களில் மத்திய அரசு தலையிடுவது அதிகரித்திருக்கிறது!

"'தேசிய ஒருமைப்பாடு' என்பதன்பேரால்செய்யும் சில காரியங்கள், மாநிலங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையிடுகின்றன!

"மத்திய அரசின் அனுமதியின்றியே மாநில அரசுகள் சொந்தமாகத் திட்டங்களை வகுத்துக் கொண்டு செயலாற்றவும், தொழில்களைத் துவக்கவும் ஏன் அனுமதிக்கப்படக் கூடாது?"

என்றெல்லாம், முன்னாள் இரயில்வே அமைச்சர் திரு. எஸ். கே. பட்டீல் சுட்டிக்காட்டியும் குற்றஞ்சாட்டியும் வலியுறுத்தியும் உள்ளார்.

இங்கிருந்து 10 கல் தொலைவில் உள்ள நரோடா தொழில் பேட்டையில், ரப்பர் தொழிற்சாலை ஒன்றை அவர் திறந்து வைத்தார்.

சௌராஷ்டிர மாநிலத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியில், டாட்டா நிறுவனம் ஒரு பெரிய உரத் தொழிற்சாலை நிறுவ முன்வந்திருப்பதைச் சுட்டிக்காட்டி அவர் குறிப்பிட்டதாவது :—

"இன்றியமையா உரவகைகளுக்காகப் பெருந்தொகை செலவிடப்படுகிறது. உள்நாட்டிலேயே உரவகைகள் உற்பத்தி செய்வதில் மக்களும் ஆர்வம் காட்டுகின்றனர் இந்த நிலையில், தனியார் துறையில் உரம் உற்பத்தி செய்வதை ஏன் ஆட்சேபிக்கவேண்டும்?"

அவர் மேலும் கூறியதாவது :—

"நாட்டின் செல்வத்தை பங்கிடுவதற்குமுன், செல்வத்தை உற்பத்தி செய்யவேண்டும்.

வெளிநாட்டுத் தொழிலதிபர்கள் கூட இங்கு வந்து முதலீடு செய்வதை நான் வரவேற்கிறேன். நூற்றுக்கு நூறும் அவர்கள் பங்கேற்பதைக்கூட வரவேற்கிறேன்.

தற்போதைய சனகர்ஷக நடைமுறையில் பண்டங்களை விநியோகிப்பது இயலக்கூடியதாக என்றும் ஏற்படுகிறது. நடைமுறைக் கேலக்கடிய அரசாங்க விநியோகமுறை வகுக்கப்பட வேண்டும்."

அறிஞர் அண்ணா உடல் நிலை

நியூயார்க், அக். 14—அறிஞர் அண்ணா அவர்களின் உடல்நிலை நாளுக்குநாள் தேறிவருகிறது. வழக்கம்போல் உணவு உட்கொள்கிறார்; உடற்பயிற்சிக்காக மாலை நேரங்களில் பூங்காவுக்குச் சென்று சிறிதுநேரம் உலவுகிறார்.

இரண்டாவது பரிசுச் சீட்டு விற்பனை

திருச்சி, அக். 14—தமிழக அரசின் இரண்டாவது பரிசுச் சீட்டுக் குலுக்கல் நவம்பர் 20-ம் நாள் நடைபெறும். இதற்கு மூன்று வரிசைகளில் டிக்கெட்டுகள் (ஒவ்வொன்றிலும் 10 இலட்சம் டிக்கெட்டுகள்) விற்கப்படும்.

அக். 15-ம் நாள் முதல் பரிசுச் சீட்டுகள், இதற்குக் குலுக்கலுக்கு விற்பனையாகும்.

நவம்பரில் விற்பனை செய்யவிருக்கும் 30 இலட்சம் பரிசு டிக்கெட்டுகளும் பின்வருமாறு விற்பனையாகும் :—

சென்னை நகரம் 4,98,000.
கோவை 3,00,000.
தஞ்சாவூர் 3,00,000.
மதுரை 2,91,000.
திருச்சி 2,70,000.

தென்ஞற்காடு, ஸ்ரீரங்கராஜபுரம், சேலம், திருநெல்வேலி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 2,10,000.

செங்கற்பட்டு, வடஆற்காடு ஒவ்வொன்றிலும் 1,50,000.

கன்னியாகுமரி 78,000.
தர்மபுரி 72,000.
நீலகிரி 51,000.

வளம் இருந்தும் வாட்டம் ஏன்?

படித்தவர்கள் உழைத்தால் நாடு விரைந்து முன்னேறும்

'கற்ற கல்விக்கும் ஆற்றும் பணிக்கும் தொடர்பு வேண்டும்'—பட்டதாரிகளிடை தமிழக--கேரளக் கல்வி அமைச்சர்கள் உரை

சென்னை, அக். 14—

"நமது காட்டில் இயற்கை வளங்கள் ஏராளமாக இருக்கின்றன; அவற்றைப் 'பயன்படுத்தி, நாட்டை வளமாக்கும் பணியில் பட்டதாரிகள் ஈடுபட்டுக் கடுமையாக உழைக்க முன்வர வேண்டும்.

"வளங்கள் பல இருந்தும் உலக நாடுகளுடன் போட்டி போட்டுக் கொண்டு நம்மால் முன்னேற முடியவில்லை; இதற்குக் காரணம், கல்வி கற்றவர்கள் எதற்காகப் படித்தார்களோ, அதற்காகத் தங்கள் கல்வி அறிவைப் பயன்படுத்துவதில்லை; இந்த நிலை மாறவேண்டும்.

"ஐப்பானில் 1958 முதல் 1966 வரையில்—10 ஆண்டுகளில், நாட்டின் உற்பத்தி 750 சதவிகிதம் பெருகியது; நமது நாட்டிலும் அத்தகைய முன்னேற்றம் இயலக்கூடியதேயாகும்; அதற்குத் தேவையான கடுமையான உழைப்பும், தியாக மனப்பான்மையும் படித்தவர்களிடமிருந்து வரவேண்டும்.

"தமிழ்நாட்டில் உள்ள பட்டதாரிகள் கடுமையாக உழைத்தால், வருங்காலச் சமுதாயம் வளமாக வாழ முடியும்; படித்த

(இதன் தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

காவிரித் திட்டம் கிடப்பில் போடப்பட்டது யாரால்?

எட்டாண்டுக் காலமாகத் தட்டிக்கழித்தது காங்கிரசு ஆட்சியே

டில்லியின் ஒப்புதலுக்காகவே கழக அரசு காத்திருக்கிறது -- சுப்பிரமணியத்துக்கு பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி பதில்

சென்னை, அக். 14—

"காவிரி நீர் கொண்டுவரும் திட்டம் பற்றித் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம் 'இத்திட்டம் வராது' என்று பேசியிருக்கிறார்.

"சுப்பிரமணியத்தின் வாய், 'வராது' என்கிறது; ஆனால் அவரது உள்ளம் 'வரக்கூடாது' என்கிறது!

"'வராது' என்பார்களானால், அத்திட்டம் வரும்; 'வரக்கூடாது' என்பார்களானால், யார் தடுத்தாலும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் --என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"திட்டத்தின் முதல் கட்டமாக மத்திய சுகாதாரத் துறை கடந்த வாரம் இந்தத் திட்டத்திற்கான ஒப்புதலை வழங்கிவிட்டது. இறுதி ஒப்புதலைத் திட்டக் குழு தரவேண்டும்.

"இங்கே இத்திட்டத்தை ஒட்டி நடைபெறும் வேலைகளைப் பற்றி 15 நாளுக்கு ஒருமுறை மத்திய அரசுக்கு எழுதி வருகிறேம். இதற்கென்று சிறப்புப் பொறியியலாளர்கள் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

"தமிழக அரசால் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்பது பற்றிச் சந்தேகமே வேண்டாம்"

என்று கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள், நேற்று 58-வது வட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் காவிரி நீர்த் திட்டம் பற்றி சி. சுப்பிரமணியம் கூறியுள்ளவைகளை மறுத்துப் பேசுகையில் விளக்கிக் கூறினார்.

காவிரி நீர்த் திட்டத்தின் செயலாக்கத் திட்டங்களை விளக்கிப் பேசுகையில் அவர் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டதாவது :—

சென்னை மாகாராட்சியின் ஆளும் பொறுப்பு 59-ம் ஆண்டு தி. மு. கழகத்தின் கைக்கு வந்தது! கழக நிர்வாகத்தினர், பலலாண்டுக் காலமாகக் கவனிக்கப்படாமலிருந்த கூவத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று—வீராணம் ஏரியிலிருந்து காவிரித் தண்ணீரைச் சென்னைக்குக் கொண்டுவர வேண்டுமென்று திட்டமிட்டனர்; ஆனால், 1959-ம் ஆண்டிலிருந்து அன்று மாநிலத்தின் அரசுப் பொறுப்பிலிருந்த காங்கிரசு ஆட்சியாளர்களுக்கு எடுத்துச் சொல்லிவந்தபோது, 1959-ல் இருந்து 1967-வரை அத்திட்டங்கள் கவனிக்கப்படாமலிருந்தன.

கோட்டையில் காங்கிரசுக் கட்சி ஆட்சியும், ரிப்பன் மாளிகையில் கழக ஆட்சியும் நடைபெற்ற தால், அத்திட்டம் எட்டாண்டுக் காலம் கிடப்பில் போடப்பட்டிருந்தன!

கழகம் மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் பொதுப் பணித்துறை அமைச்சர் என்ற வேற்றுமை இல்லாமல், 'எல்லாரும் தமிழக அரசைச் சார்ந்தவர்கள்' என்ற முறையில் நானே முயற்சி எடுத்துக் கொண்டு, மேயர் -- ஆணையர் -- மற்றும் தி.மு.க. மாகராட்சி நிர்வாகிகள் ஆகியோரை அமைத்து சிறப்பு மாநாடு நடத்தி -- இதுபற்றி ஆலோசனை கேட்டுத் திட்டத்தை நிறைவேற்ற முடிவெடுத்தோம்.

கூவம் சீரமைப்புத் திட்டத்திற்கான துவக்க வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

சென்னைக்கு, வீராணம் ஏரியிலிருந்து காவிரி நீரைக் கொண்டுவர ரூ. 25 கோடியில் திட்டம் தீட்டியிருக்கிறோம்; 'இந்தத் தொகையை மத்திய அரசு தரத் தேவையில்லை; மாநில அரசே செலவழிப்பது' என்று முடிவெடுத்தோம்; என்றாலும், திட்டத்துக்கான அனுமதியை -- ஒப்புதலைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம்.

ரூ. 5 கோடிக்குமேல் மாநில அரசு எந்தத் திட்டம் போட்டாலும், மத்திய அரசினுடைய ஒப்புதலைப் பெறவேண்டும்.

'திட்டம் விரைவாக நடைபெற வேண்டும்' என்ற கோரிக்கத் தோடு சென்ற ஆண்டு இதற்கான துவக்க விழா நடத்தினோம்.

தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர்—பொறுப்பான பதவியில் இருந்தவர்—சி. சுப்பிரமணியம், 'காவிரித் திட்டம் வராது; துவக்க விழா நடத்திச் சினிமா பொம்மையை வைத்திருக்கிறார்கள்' என்று கூறியிருக்கிறார்.

'பெண் பொம்மையை நிறுத்தி, அதைக் காவிரித் தாய என்று கூறுவதா?' எனக் கேட்கும் சுப்பிரமணியத்தை வாதத்திற்காகக் கேட்கிறேன்—இப்படிப்பட்ட ஒரு பெண் பொம்மையை நிறுத்தி தாரை அதைப் 'பாரதத் தாய்' என்று கூறினோம்!

'பொம்மையை நிறுத்தி, 'தாய்' என்று கூறுவதா?' எனக் கேட்கும் சுப்பிரமணியத்தின் வாதம் இப்போது போய் ஒளிந்த இடம் எது?

சுப்பிரமணியம், 'காவிரித் திட்டம் வர முடியாது' என்கிறார்? —'வரக்கூடாது' என்கிறார்?—என்று புரியவில்லை!

(4-ம் பக்கம் பார்க்க)

'நல்ல தீர்ப்பு'க்கு மக்கள் முன் நிற்போம்!

சாதனைகளைக் கூற சுப்பிரமணியம் தயாரா?

'அரசியல் இழிதன்மை'க்கு இலக்கணம்வகுப்பதுநேர்மையல்ல'

சத்தற்ற வாதங்களுக்கு அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கண்டனம்

சென்னை, அக். 14—

"திரு. சி. சுப்பிரமணியம் எதிர்பார்க்கும் அளவுக்கு அண்ணாவின் நோயை வைத்து நாங்கள் வாக்குப் பெற நினைக்கவுமில்லை -- நோயை வைத்து ஓட்டு வாங்கும் அளவுக்குக் கழகத் திற்குப் பஞ்ச நிலையும் இல்லை!

"'அண்ணா நோய்வாய்ப்பட்டிருக்கிறார்; எனவே, அவர் நலம் பெற்று மகிழ்ந்துவரும் வித்தில் நீங்கள் உதயசூரியனில் முத்திரையிடுங்கள்' என்று எங்களில் எவரும் இதுவரையில் சொல்லவில்லை; 'அண்ணா அமெரிக்காவில் இருக்கிறார்; அவர் மனம் நோகும் விதத்தில் கட்சிக் கட்டுப்பாட்டைக் குலைத்து விடாதீர்கள்' என்றுதான் கழகத் தோழர்களோப் பார்த்துக் கூறினோம்; சுருங்கச் சொன்னால், 'நோய்' என்ற வார்த்தைக்கே இதில் இடமில்லை; நாங்கள் குறிப்பிட்டது உள நோய்தானே தவிர உடல் நோயை அல்ல!

"'அண்ணாதுரை நோய்வாய்ப்படடிருப்பதை -- உடல்நலம் குன்றியிருப்பதை ஓட்டுக்காகப் பயன்படுத்திக் கொள்வது போன்ற அரசியல் சீழான தன்மை எதுவும் இருக்கமுடியாது' என்று திரு. சி. சுப்பிரமணியம் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்; ஆனால் அதேசமயம், 'அண்ணாதுரையைப்போல ஆயிரமாயிரம் ஏழைகள் நோய்வாய்ப்பட்டு வறுமையிலும், பசிப் பிணி காரணமாகச் சிகிச்சைக்குக்கூட வழியில்லாமலும் அவதிப்படுகிறார்களே -- அந்த ஏழைமக்களுக்குப் புதிய வசதியும், வாய்ப்பும் கிடைக்க வேண்டாமா?'' என்று ஓரிடத்தில் கேட்கிறார்.

"'நோயாளியை வைத்து ஓட்டுக் கேட்பது அரசியல் இழிதன்மையாகும்' எனக் கூறும் அவர், 'ஆயிரமாயிரம் நோயாளிகள் அவதிப்படுகிறார்களே' என்று அந்த நோயாளிகளைக் காட்டி ஓட்டுப் பெற நினைப்பதேன்? இதில் எது அரசியல் இழிதன்மை? அவர் கூறுவதுபோல், அரசியல் இழிதன்மைக்கு அவர் இறங்கினாரா -- நாம் இறங்கினோமா?

"அப்படியே பார்த்தாலும், சாதாரண மனிதனுக்கு வந்த நோயும் அண்ணாவுக்கு வந்த நோயும் சமமென்று கருதுவது நியாயமா? காந்தியடிகளுக்கு வந்த நோயும், நேருவுக்கு வந்த நோயும், இராசேந்திர பிரசாத்துக்கு வந்த நோயும், ஏழைகளுக்கு வரும் நோயும் சமமென்று சி. சுப்பிரமணியம் கருதினாரா? காங்கிரசுக்காரர்கள்தான் அப்படிக் கருதினார்களா? கமலா நேரு அவர்களின் நோய்கூட, ஐரோப்பா சென்றுல்தான் தீருமென்ற நிலையிலிருந்தது -- சென்றார்கள்; இதை சுப்பிரமணியம் மறுப்பாரா? 'ஆயிரம் ஏழைகள் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள்' என்பதும் இதுவும் ஒன்றுதானே?

"'அண்ணாவுக்கு நோய்' என்றவுடன் இலட்சக்கணக்கான மக்கள் கண்ணீர் சிந்தி, 'நமக்கு பெற்று வர வேண்டும்' என்று வாழ்த்தினார்களே -- ஏன்?--'அண்ணா ஒருவர் பிழைத்தால், நாலைந்து கோடி மக்களும் வாழ்வார்கள் -- வாழ வழி செய்வார்' என்பதால்தான்! ஆனால் சுப்பிரமணியம், நோயையும் உயிரையும் எடை போடுகிறார்!

"'எந்த மக்களே இவர், 'நோய்வாய்ப்பட்ட ஆயிரமாயிரம் நோயாளிகள்' என்று கூறுகிறாரே -- அந்த மக்கள்தான், சென்னையிலுள்ள 12 தொகுதியிலும் கழகத்தை வெற்றி பெற வைத்தார்கள்!

"'நோயை வைத்து ஓட்டுப் பெறுவது அரசியல இழிதன்மை' என்று சுப்பிரமணியம் அரசியலுக்கு இலக்கணம் வகுத்து விட்டு இருக்கையில் அமர்ந்தபடியும், அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா எழுந்து, மேடையில் அமர்ந்திருந்த எஸ். ஜி. விஜயமுறத்தியைக் காட்டி -- அவர் உடலெல்லாம் அடிபட்டிருக்கும் காயத்தைக் காட்டி -- 'அப்படிப்பட்டவருக்கு நகராட்சித் தேர்தலில் ஓட்டுப் போடுங்கள்' என்று பேசியிருக்கிறார்!

"அரசியல் இழிதன்மை யாருக்கு—காங்கிரசுக்கா? கழகத்திற்கா? முதல்தரமானவர்களே இப்படிப் பேசினால், மயக்கத்தில் இருப்பவர்கள் எப்படிப் பேசாமல் இருப்பார்கள்?

"'தி. மு. கழகம், ரூபாய்க்கு 5-கரசுதான் நன்மை செய்தது; நாங்கள் வெற்றிபெற்றால் ரூபாய்க்கு ரூபாய் மக்களுக்குப் பலன் அளிக்கும்படி செய்வோம்; ஆதலால், ஓட்டை எங்களுக்குப் போடுங்கள்' என்கிறார் சுப்பிரமணியம்.

"நான் அவரைக் கேட்கிறேன்—20 ஆண்டுகளாக நீங்கள் இருந்தீர்களே -- அப்பொழுது இந்த எண்ணம் உங்களுக்குத் தோன்றுந்தேன்? அப்படிச் செய்திருப்பீர்களானால், அ. பொ. அரசு, கழக மேயராக வந்திருக்க முடியுமா? அப்படியே பார்த்தாலும், ரூபாய்க்கு ரூபாய் பலனளிக்கும்விதத்தில் எப்படிச் செய்யமுடியும்? நிர்வாகத்திற்குக்கூட எடுத்துக் கொள்ளாமல் --- நகராட்சியில் வேலை செய்பவர்களுக்கெல்லாம் சம்பளம் கொடுக்காமல் --- நகராட்சியின் அன்றுடச் செலவுகளுக்கெல்லாம் எடுத்துக்கொள்ளாமல் --- நீங்கள் கொடுக்கும் ஒரு ரூபாய் வரியில் எதுவும் எடுத்துக்கொள்ளாமல் --- உங்களுக்கே பயன்படும்படிச் செய்வோம் என்றால், இந்த வாதத்தை யார் ஏற்றுக்கொள்ள முடியும்? கேட்பவர்கள் சிரிக்கமாட்டார்களா? இரஷ்யாவில்கூட, 'இந்த முறையை அமல்படுத்த முடியாது' என்று விட்டுவிட்டார்களே!

"உண்மையிலேயே புள்ளிவிவரக் கணக்கை எடுத்துக் கூற விரும்புவாரானுல், சி. சுப்பிரமணியம் ஒரு பக்கம் நிற்கட்டும் -- நான் ஒரு பக்கம் நிற்கிறேன்; நானும் கூறுகிறேன் -- அவரும் கூறட்டும்; 20 ஆண்டில் காங்கிரசு செய்த சாதனையை அவர் கூறட்டும் -- ஒன்றரையாண்டுக் காலத்தில் கழக அரசு செய்த நன்மையை நான் கூறுகிறேன் -- மக்கள் தீர்ப்பளிக்கட்டும்! வருவாரா அவர்!"

—83-வது வட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்

இரஷ்யாவின் இந்திய விரோதப் போக்கு?

வாஷிங்டன், அக். 12—

"பாகிஸ்தானுக்கு இரஷ்யா ஆயுதங்கள் வழங்குவது நெருக்கடியை ஏற்படுத்தும் என்று மாஸ்கோவிடம் எடுத்துச் சொல்லியும், அதைப் பொருட்படுத்த வில்லை."

என்று, இந்திய வெளி விவகார அமைச்சர் திரு. பி. ஆர். பகத் கூறினர்.

செய்தியாளர்கட்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறிய தாவது:—

"இரஷ்யாவுக்கு, இந்தியாவுடன் நட்புறவு இருந்துவருகிறது; ஆனால், பாகிஸ்தானுக்கு யார் ஆயுதம் அனுப்பினாலும், அது இந்தியாவுக்கு எதிராகவே பயன்படுத்தப்படும் என்பதை இந்தியா அறியும்".

நாசவேலைப் பயிற்சி

அசாம் இளைஞர்க்கு அளிக்கப்படுகிறதாம்

ஷில்லாங், அக். 12—

அசாம் மாநிலம் சிப்சாகர் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 100 இளைஞர்களுக்கு, தக்மைறவு நாகர்களின் 'இராணுவ' முகாம்களில் நாச வேலைப் பயிற்சி அளிக்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கிறது.

ரேமழங்கு வெடிக்கும் வெடிகுண்டுகளைப் பயன்படுத்தி இரயில்கள், இரவில்வே பாலங்கள், கட்டடங்கள், விமானங்கள், விமான நிலையங்கள், பெட்ரோல் டாங்குகள் ஆகியவைகளை எப்படித் தகர்ப்பது எனபது போன்ற முறைகள் அவர்களுக்குக் கற்றுத்தரப்படுகிறதாம்!

இந்தப் பயிற்சியாளர்கள், தற்போதை அசாம் அரசைக் கவிழ்த்து, 'சுதந்தரக் குடியரசு' அமைக்க வேண்டுமெனக் கோரும் இரகசிய இயக்கமொன்றைச் சேர்ந்த வர்களாவர் என்று நம்பப்படுகிறது.

தக்மைறவு நாகர்கள், சீனு, பாகிஸ்தான் நாடுகளின் உதவியும் இவர்களுக்குக் கிடைக்கக்கூடுமாம்.

இந்தச் சதியைப் பின்னணியிலிருந்து இயக்கிவரும் வாசையத் உசேன் என்பவர், தற்போது நாகாலாந்தில் இருப்பதாகத் தெரியவருகிறது.

இதற்கிடையே, அசாமின் தேயிலே விற்பனே கராரான ஜோகார்ட்டில், 'இரத்த வெறி கொண்ட இந்தியாகளே! அசாமை விட்டு வெளியே துங்கள்!' என்ற வாசகத்துடன் பல சுவரொட்டிகள் மீண்டும் ஒட்டப்பட்டருக்கின்றன.

புரட்சி நாகர்கள்

பயிற்சி முடிந்து திரும்பியுள்ளனராம்

சென்ற சீன ஆயுதங்களையும் கொண்டு வந்துள்ளனராம்

ஷில்லாங், அக். 11—

சுமார் 1,000 புரட்சி நாகர்கள் பயிற்சி முடிந்து சீனவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியிருப்பதாகக் கூறப்படுகிறது.

சீனவில் இவர்கள் கொரில்லாப் போர் முறையும், புதிய தந்திரவங்களும் பயிற்றுவிக் கப்பட்டுள்ளனராம்.

இவர்கள் சிறு சிறு கும்பலாக—40—50 பேர்களாக இந்தியாவுக்குள் நுழைந்துவிட்டிருக்கின்றனராம். சீன ஆயுதங்களையும் இவர்கள் உடன் கொண்டு வந்துள்ளனராம்.

தக்மைறவு நாகர்களின் 'இராணுவத் தளபதி' ஜெனரல் மோவு அங்காமியும் இந்தியா வுக்குத் திரும்பியிருப்பதாக நம்பிகையான தகவல்கள் கூறுகின்றன.

அண்ணாவுக்கு செகசிவன்ராம் புகழாரம்

'ஏழைகள் எண்ணத்தை மதித்துச் செயல்படுகிறார்'

'அவருடைய இலட்சியக் கொள்கைகள். எவரையும் கவர்ந்துவிடும்'

சிதம்பரம், அக். 14—

"திரு. அண்ணாதுரை எனது நெருங்கிய நண்பர்; அவருக்கும எனக்கும அரசியல் அடிப்படையில் கருத்து வேறுபாடுகள உண்டு; இருந்தாலும், நாங்கள் இனிய நண்பர்கள்

"இப்பிடிக் கருத்து வேறுபாடுகளுக்கிடையே ஒன்றுபட்டிருப்பதுதான் சனநாயகத்தில் சிறப்பு அம்சமாகும்; நியாய மும் முறையுமாகும.

"கருத்து வேறுபாடுகள் இருந்தாலும நண்பர்களாக இருகக எவ்விதத் தடையுமில்லே.

"அவரது அரசியல் கருத்துக்களில் சில எனக்கு ஒவ்வாத தாக இருக்கலாம்; ஆனல் அவருகுள்ள திறமைகள் -- தனித்தன்மைகள் என்னே வெகுவாகக் கவர்ந்துள்ளன!

"திரு. அண்ணாதுரை அவர்கள், எழுத்தாலும் பேச்சாலும் இந்த நாட்டில் அவருக்கெனத் தனித்த இடத்தைப் பெற்றிருக்கிறார்.

"அவர் அரசியலில் இல்லா திருந்தாலும், தமிழ் இலக்கியத் துறையில் தலேசிறந்த உயர்ந்த இடத்தைப் பெற்றிருப்பார் எனபதில் சந்தேக மில்லே.

"அவருக்கென்று தனிக்கொள்கைகள் -- இடைசியப் பிடிப்புக்கள் உண்டு; அந்த இலட்சியப் பிடிப்புதான் எனனே வெகுவாகக் கவர்ந்துள்ளது.

"காந்தியடிகளும், காங்கிரசரும் மதுவிலக்கை தீவிரமாகப் பிரசாரம செய்துவந்தார்கள்; தமிழகத்தில் இராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது, அத்திட்டம் அமுலாகியது; வேறு பல மாநிலங்களிலும் அமுலாக்கப்பட்டது; ஆனல், படிப்படியாக அந்த மாநிலங்களில் மதுவிலக்குத் திட்டம் தளர்த்தப்பட்டு எங்கேயோ போய முடிந்துவிட்டன!

"குசராத் மாநிலம், தமிழகத்தைத் தவிர மற்ற மாநிலங்களில், ஏதோ ஓர் வடிவத்தில் மதுவிலக்குத் திட்டம் நேயங்கு விட்டது!

"தமிழகத்தில் மதுவிலக்குத் திட்டம் தளர்த்தப்பட வேண்டும் என்று கோருவதற்குக் கொஞ்சமும் இடமளிக்காத அளவில் திரு. அண்ணாதுரை அவர்கள் அழுத்தமாக இருக்கிறார்; இது அவரிடத்தில் எனக்குள்ள மதிப்பை மேலும் அதிகமாக்கியுள்ளது.

"மக்கள் தலேவர் ஒருவரால் தான இவ்வாறு ஏழை மக்களின் எண்ணத்தை மதித்துச் செயல்பட முடியும்!

"மதுக் குடியால் ஏழை எளிய மக்கள் வாழ்வில் ஏறபடுவது பொருளாதாரச் சீர்குலேவை மட்டுமல்ல -- அவர்களின் வாழ்வில் ஏற்படும தார்மீகக் குறைகளேயும் உணர்ந்து திரு. அண்ணாதுரை, அதை அஞ்சாமைக்க மறுக்கிறார்; இதற் காகத்தான், 'காந்தியாரின ஆத்மா தமிழக அரசை வாழ்த்தும்' என்று காஞ்சிபுரத்தில் பேசும்போது குறிப்பிட்டேன்.

"திரு. அண்ணாதுரை அவர்களின் பலதரப்பட்ட குண நலன்களேப் பற்றி விவரிக்கத் தேவையில்லே; அவர், ஆங்கிலம—தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வல்லமை வாய்ந்த சொல்லாற்றல் -- எழுத்தாற்றல் மிக்கவர்! நலசச்சுவையோடு எழுதுவதிலும் பேசுவதிலும் வல்லவர்!

"சென்னேயில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன்; முதலமைச்சர்கள் மாநாடு கூடியிருந்த நேரத்தில் கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு அமெரிக்க காவிலிருந்து உணவுத் தானியம் வருவதைக் கண்டித்துப் பேசினார்; அவருக்குப் பின்னர் திரு. அண்ணாதுரை பேசும்போது, 'நம்பூதிரிபாடு உயர்தரமான பிரமாணர்; நான் வைதீகன் அல்லன்; எனவே, நம்பூதிரிபாடு 'அமெரிக்கக் கோதுமையைத் தொடாமாட்டேன்' என்றுகூறியதுபோல், நான் 'மறுக்க மாட்டேன்' என்றார். அப்போது மாநாடே சிரிப்பில் ஆழ்ந்தது!

"அப்படிப்பட்ட அறிவாளரின் பட்த்தை இங்கே திறந்து வைப்பது நகராட்சி உறுப்பினர்களுக்கு ஒளிபூட்டுவதாக இருக்கும்; அவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமையும் என நம்புகிறேன்.

"ஏழை எளிய மக்களுக்கு-வசதியற்ற மக்களுக்கு உங்களாலியன்றஉ ஈல்ல காரியங்களேச் செய்யுங்கள். நீங்கள் செய்கின்ற நல்ல காரியங்கள் தான் திரு. அண்ணாதுரை அவர்களுக்கு மன மகிழ்ச்சியை அளிக்கும்!"

—தென்சார நகராட்சியில் அண்ணா உருவப் படத் திறப்பு விழாவில்

மாநகராட்சித் தேர்தலில் ஒழுங்கு விதிகள்

அனைத்துக் கட்சிகளும் ஏற்றன

சென்னை, அக். 14—

சென்னைப் போலீசு ஆணையர் கூட்டியதோர் மாநாட்டில், அக். 27-ம் நாள் நடைபெறவிருக்கும் சென்னை மாநகராட்சித் தேர்தலில் கடைபிடிப்பதற்கான சில ஒழுங்கு விதிகளை அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் ஒப்புக்கொண்டனர்.

ஒழுங்கு விதிகள் பற்றி ஓர் உடன்பாடு கண்டதற்காகப் போலீசு ஆணையர், அனைத்துக் கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்; 'தேர்தல் ஒழுங்காகவும், அமைதியாகவும் நடைபெற ஒத்துழைப்புத் தரவேண்டும்' என அவர் கேட்டுக்கொண்டார்.

அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளிடை ஏற்பட்ட ஒழுங்கு விதிகள் பற்றிய உடன்பாட்டு விவரம் வருமாறு:—

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் போன்ற எல்லாவிதமான தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளும் அக். 25-ந் தேதி மாலை 5-மணியளவில் முடிந்துவிட வேண்டும்.

வெவ்வேறு கட்சிகளின் கூட்டங்கள் நடைபெறும் இடங்களுக்கு மத்தியில் நியாயமான தூரம் இருக்கவேண்டும். ஒருநாளில் ஒரு வட்டத்தில் இரண்டு கூட்டங்களுக்குமேல் நடத்துவது கூடாது.

மாலை 6-மணிமுதல் நள்ளிரவு வரையில் கூட்டங்கள் நடக்கலாம்; ஒரு கூட்டம் 4-மணி நேரம் தொடர்ந்தாற்போல் நடைபெறலாம்.

தேர்தலின்போது ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவதற்கு லைசென்சுக் கட்டணமோ அல்வது கோர்ட்டுக் கட்டண அஞ்சல் தலையோ தேவையில்லை.

மவுண்ட் ரோடு, ரவுண்டு டாணா, சென்ட்ரல் இரயில்நிலையப் பகுதிகளில் -- குறிப்பாகப் போக்குவரத்து அதிகமாக உள்ள நேரங்களில் ஊர்வலங்கள் செல்லாமல் தவிர்க்கப்பட வேண்டும். ஊர்வலங்களை ஒழுங்கான முறையில் நடத்திச் செல்வதற்காகத் தொண்டர்களை நியமிக்க வேண்டும்.

சுவரொட்டிகளில் தனிப்பட்ட தாக்குதல் இருக்கக்கூடாது; வீதிகளில் தேர்தல் பிரச்சாரங்களை எழுதுவதைத் தவிர்க்க வேண்டும்.

வாக்குச் சாவடிகளுக்கு 100 மீட்டர் தூரத்துக்குள் சுவரொட்டிகள் இருக்கக்கூடாது; அந்த இடத்தில் வண்டி, கார் போன்றவைகளும் செல்லக்கூடாது. உடல் ஊனமானவர்களும், நோயாளிகளும் சக்கர நாற்காலிகள் அல்லது 'ஸ்ட்ரெச்சர்'களைப் பயன்படுத்தலாம்.

வாக்காளர்களுக்குத் தரப்படும் அடையாளச் சீட்டில் வாக்காளர்களின் பெயர் -- தேர்தல் நடைபெறும் நாள் -- நேரம் -- சின்னம் ஆகியவை இருக்கலாம்; ஆனால் வேட்பாளருடைய பெயர் இருக்கக்கூடாது.

அறிஞர் அண்ணா வழிகாட்ட வேண்டும்

செட்டிநாட்டரசர் முத்தையா பேச்சு

சென்னை, அக். 12—

சென்னை தியாகராயநகர் வாணி மகாலில், 10—10—68-ல் நடந்த அறிவு நூலகத்தின் 'அண்ணாவுக்கு அறுபது' என்னும் நூல் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் திரு. எம். ஏ. முத்தையா (செட்டியார்) குறிப்பிட்டதாவது:—

"இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தி வெற்றி பெற்ற பிறகும் இந்தி ஆதிக்க அபாயம் நீங்கவில்லை! அரசியலை அழகுற நடத்திவரும் முதலமைச்சர் அண்ணா அவர்கள்தான், இந்தி ஆதிக்க அபாயத்திற்கு முடிவுகட்ட வழிகாட்ட வேண்டும்."

விழாவுக்கு வந்திருந்தவர்களை, முத்தாரம் தினகரன் வரவேற்றார்.

விழாவில், ஏ. பி. சனார்த்தனம் எம் எல்.சி., கவிஞர் கா. வேழவேந்தன் எம்,எல்,ஏ., நூர்முகம் மது ஆகியோரும் பேசினர்.

'உணவுத் தேவை--நிறைவு செய்யும் பொறுப்பை நிறைவேற்றுவேன்'

'தமிழக அரசின் முயற்சி பாராட்டுக்குரியது-- கருத்து வேற்றுமைக்குச் சிறிதேனும் இடமில்லை'

பற்றாக்குறைப் பகுதிகளுக்கு அரிசி அனுப்பும்விழா-- மத்திய உணவு அமைச்சர் செகசீவன்ராம் விளக்கம்

தஞ்சை, அக். 14—

"தி. மு. கழக அரசு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தீவிர முயற்சி செய்கிறது; இதை அரசியல் வாதிகள் தவறாகக் கருதிக் கொண்டால், அரசியல் வாதிக்கும் -- அரிசிக்கும் சம்பந்தமில்லை என்றுதான் சொல்லுவேன்.

"மற்ற துறைகளில் அரசியல்வாதிகளிடையே மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம்; உணவுத் துறையில் அதற்கு இடமில்லை; ஏனென்றால், உணவுப் பிரச்சினைதான் முதல் பிரச்சினையாகும்.

"எந்தெந்த மாநிலங்களில் உணவு தேவைப்படுகிறதோ அந்தந்த மாநிலங்களில் உணவுத் தேவையை நிறைவு செய்வது மத்திய அரசின் கடமையாகும்; அந்தக் கடமையை நிச்சயம் நான் நிறைவேற்றுவேன்"

இவவாறு உணவுத் துறை அமைச்சர் செகசீவன்ராம், தஞ்சையிலிருந்து குறுவை நெல் -- அரிசியைப் பற்றாக்குறைப் பகுதிகளுக்கு அனுப்பும் திட்டத்தை இயக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நாற்பது வாகன்களில் 870 டன் அரிசியை ஏற்றிக்கொண்டு ஒரு கூட்ஸ் இரயில் சென்னைக்குப் புறப்பட்டது.

200 டன் அரிசியை ஏற்றிக் கொண்டு 40 லாரிகள் இராமநாதபுரத்திற்கும், மதுரைக்கும் புறப்பட்டன.

விழாவுக்கு, பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி தலைமைதாங்கினார்.

உணவுத் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன், வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி ஆகியோரும் விழாவில் கலந்துகொண்டு பேசினர்.

நவீன விஞ்ஞான முறையில் டி.வி.எஸ் ரீடிரெடிங் செய்யும் டயர்கள் நீண்டகாலம் உழைக்கின்றன செலவும் குறைவு



புது டயர்களின்
உற்பத்தி முறையையே டி.வி.எஸ். ரீடிரெட் செய்வதிலும் பின்பற்றுகிறது



ரீடிரெடிங் செய்த டயரில் ஆணி, கண்ணாடித்தூள் முதலியவை அணுவளவு இருந்தாலும் டயர் பழுதாகிவிடும், டி.வி.எஸ். ஒவ்வொரு டயரையும் கண்ணும் கருத்துமாய்ப் பரிசோதித்துச் சுத்தம் செய்கின்றனர்.



ஆணி, கண்ணாடித் துண்டு முதலியவற்றால் காயம்பட்ட இடங்களை, விஞ்ஞான ரீதியில் பக்குவமாய் பழுதுபார்க்கின்றனர்.

ரீடிரெடிங் செய்த டயரின் ஒட்டுமானத்திற்குள் சிறிது காற்று இருந்தாலும், அதனால் டயரே வெடித்துவிடலாம். எனவே காமெல்பாக் ரப்பரை அழுத்தமாகப் பொருத்திவிடுகின்றனர்.

ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காமெல்பாக் ரப்பரை உபயோகிப்பதில்லை. காமெல்பாக் ரப்பர் கெடாமல் இருக்க, குளிர்சாதன அறையில் வைத்திருக்கிறார்கள்.

இம்மாதிரியான விஞ்ஞான முறைகளால் டி.வி.எஸ். ரீடிரெடிங் செய்த டயர்கள் நீண்டகாலம் உழைக்கின்றன. உங்கள் டயர்கள் தாங்கும் அளவுக்கு மீண்டும் மீண்டும் ரீடிரெடிங் செய்யலாம்.

உங்கள் பழைய டயர்களை டி.வி.எஸ்.ஸில் ரீடிரெடிங் செய்யுங்கள். இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் ரீடிரெடிங் செய்வது டி.வி.எஸ்.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது—டி.வி.எஸ்.

TVS

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

தொழிற்சாலைகள்:— பங்களூர் - கோயமுத்தூர் - மதராஸ் - புதுக்கோட்டை - செகந்திராபாத் - திருநெல்வேலி - விஜயவாடா

(இது ஒரு டி.வி.எஸ். ஸ்தாபனம்)

SI-4672

சீலத்தை இழந்துவிட்டது காங்கிரசு

நறுமணமலர் நம்மை நாடிவந்துள்ளது

நல்லவர்களையும் வல்லவர்களையும் ஈர்க்கும் சிறந்த தலைமையை நாம் பெற்றிருக்கிறோம்

அடுத்து புதுவையில் கழக ஆட்சி -- அமைச்சர் கருணாநிதி விளக்கம்

சென்னை, அக். 14 —

"இப்போது புதுவையில் கவர்னர் ஆட்சி நடைபெறுகிறது; 'நடந்தால் காங்கிரசு ஆட்சி நடைபெற வேண்டும்; இல்லாவிட்டால், கவர்னர் ஆட்சிதான் நடைபெற வேண்டும்' என்பது காங்கிரசுப் பெருந்தலைவர்களின் சனாதாயத் தத்துவமாக இருந்துவருகிறது!

"தமிழ்நாட்டில் காங்கிரசுக்காரர்களின் அந்த எண்ணம் செல்வபடியாகாமலிருப்பதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு; உங்களுடைய வீரம்மிக்க தோள்கள் -- உறுதிகொண்ட நெஞ்சம் -- நீங்கள் தி. மு. கழகத்தின்பால் வைத்திருக்கின்ற ஈடுபாடு ஆகியவைகள் அவர்களுடைய எண்ணத்தைச் செல்லாததாக்கியிருக்கிறது என்பதை உணர்ந்து, 'எப்படியும் இந்த ஆட்சியைக் கலிழ்த்துவிட வேண்டும்' எனச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

"புதுவையில் கவர்னராக இருந்தவர் சீலம்; அவர் இப்போது போய்விட்டார்; ஜட்டி கவர்னராக இருக்கிறார்.

"'சீலம்' என்ற சொல்லுக்குத் தமிழில், நேர்வழி, நாணயம், ஒழுக்கம்' என்று பொருள்; அப்படிப்பட்ட சீலம்—புதுவையைவிட்டுப் போனதன்மூலம் -- சீலம் புதுவையைவிட்டுப் போய்விட்டது!

"காங்கிரசு எதேச்சாதிகாரம், சீலத்தை ஒழித்துவிட்டு ஜட்டியை நிறுத்தியிருக்கிறது! வக்கதரவைப் பற்றிக் கவலையில்லை; சென்ற வரைப் பற்றித்தான் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"சனகாயகத்தைக் கட்டிக்காக்க வேண்டிய சீலம் காங்கிரசில் இல்லை! சீலம் புதுவையில் ஏலப்பொருளாகிவிட்டது!"

என்று, கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள், சென்னை 58-வது வட்டத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார்.

தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் தோழர் சண்முகம் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் சேவியர், செயராமன், இராமச்சந்திரன், பழனி, புவை இராமானுசம், நா. சு. மணி, கேரளியன், வேலூர் நாராயணன், மைசூர் மோசஸ், மாவட்டச் செயலாளர் நீலகிரராயணன் ஆகியோர் பேசினர்.

புதுவை மாநில முன்னாள் முதலமைச்சர் பருக் மரைக்காயரும் பேசினார்.

இறுதியாக, வட்டப் பிரதிநிதி கோபாலுக்கு திரு மு. கருணாநிதி அவர்கள் சைக்கிள் பரிசளித்தும், தேர்தல் பிரச்சாரத்தைத் துவக்கி வைத்தும் பேசுகையில் குறிப்பிட்ட தாவது:—

"புதுவை மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் பருக் மரைக்காயர் அவர்கள் தி.மு. கழகத்தில் உறுப்பினராகச் சேரும் பத்திரத்தினை, பல்லாயிரக்கணக்கில் கூடியிருக்கின்ற உங்கள் முன்னிலையில் என்னிடம் அளித்திருக்கிறார்கள்.

இன்று தி.மு. கழகத்தின் அதிகாரபூர்வமான தலைமைக் கழக உறுப்பினர் தாளில் கையெழுத்திட்டு சென்னை மாவட்ட உறுப்பினராக அவர் சேர்ந்திருக்கிறார்.

ஏனென்றால், இந்த மாதம் இங்கே உறுப்பினர் சேர்க்கக்கூடாது; காரணம் மாவட்டச் செயலாளர் தேர்தல் • நடக்கவிருக்கிறது; ஆனால், புதுவையில் மாவட்டச் செயலாளர் தேர்தல் நடைபெற்றுவிட்டது.

தலைமைக் கழக உறுப்பினராக ரேடியாக -- பல்லாயிரக்கணக்கான மக்களின் சார்பினராக -- 'அமைச்சராக இருந்தவருக்கு அமைச்சராக இருக்கிறவன்' என்ற முறையல்ல -- 'கழகத்தின் பொருளாளர்' என்ற முறையில் இங்கே என்னிடம் உறுப்பினர் பத்திரம் தரப்பட்டிருக்கிறது.

அவர் பேசும்போது, 'நிதானத் தோடு - தெளிவோடு - ஆழ்ந்து சிந்தித்ததால் இந்த முடிவை எடுத்தேன்' என்று கூறினர்.

காங்கிரசுக்கு ஏற்பட்டிருக்கின்ற வியாதி, நல்லதைமெல்லாம் தள்ளிவிட்டுக் கெட்டதையெல்லாம் வாரிப் பூசிக்கொள்வதாக இருக்கிறது!

கூந்தலிலே இருக்கின்ற கசகாத மலர்--மணம் வீசும் மலர்--எப்போது எடுத்துப் போடப் படும்?—அல்லிகோலம் ஏதாவது நடந்த பிறகு எடுக்கப்படும்.

காங்கிரசுக்கு ஏற்பட்ட அவல கோலத்தினுல் இந்த மலர் இங்கே வந்திருக்கிறது!

சந்தனத்தோடு சவ்வாது மணம் சேருவது போல -- தங்கச் சங்கிலியில் வைர மணியை இணைப்பது போல -- பருக், கழகத்திலே சேர்ந்திருக்கிறார்!

தி. மு. கழகத்தின் சார்பில் -- கழகத் தலைவர் அறிஞர் அண்ணு அவர்கள் சார்பில் -- தமிழ் நாட்டின் நல்லவர்கள் சார்பில் அவரை நான் வரவேற் கிறேன்.

பருக் பேசும்போது குளுரைத் தார்—'பாண்டிச்சேரியில் அடுத்த அமைச்சரவை, காங்கிரசு அமைச்சரவை அல்ல' என்று!

பருக் மாத்திரமல்ல—புதுவை மக்கள அந்த முடிவை எப் போதோ எடுத்துவிட்டார்கள்! அந்த முடிவுத்தான் பருக் அவர்கள் இப்போது தொகுத்துச் சொன்னர்.

பாண்டிச்சேரியில் இப்போது நடக்கும் கவர்னர் ஆட்சிக்குப் பிறகு பொதுத் தேர்தல் நடைபெறுமானுல், கட்டோடு காங்கிரசு கலீழும்! காங்கிரசுக்கு இனி அங்கே வேலையில்லை!

தலைமைக் கழகம் முடிவெடுக்குமானுல், அந்தத் தேர்தலில் போட்டியிட்டு -- தோழமைக் கட்சிகளு இணைந்து ஆட்சி புதுவையில் ஏற்படும் என்பதற்கான விடிவெள்ளி தோன்றியிருக்கிறது! அதற்கு அடையாள மாகத்தான் பருக் மரைக்காயர் நம் பக்கம் வந்திருக்கிறார்!

இப்படிப்பட்ட நல்லவர்கள் -- வல்லவர்களெல்லாம் தி. மு. கழகத்தால் ஈர்க்கப்படுகின்ற அளவுக்குப் பெருந்தன்மை படைத்த தலைமையைப் பெற்றிருக் கிறோம்! சனாதாய நெறி -- கடமை, கண்ணியம், கட்டுப் பாட்டின் அடிப்படையில் நாம் நடக்கிறோம்!"

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வர்கள் ஐந்து நாட்கள் தங்கள் கும்பத்திற்குப் பாடுபட்டால், இரண்டு நாட்கள் ஊருக்குப் பாடுபட முன்வர வேண்டும்"

என்று கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தென்னிந்திய முஸ்லிம்கள் சங்கமும்—புதுக் கல்லூரி நிர்வாகக் குழுவினரும், புதிதாகப் பட்டம் பெற்ற முஸ்லிம் இளஞ்சுகட்கும் மற்றவர்களுக்கும் அளித்த வரவேற்பு விழாவில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டிக் கேட்டுக் கொண்டார்.

முகமது கோயா

விழாவில் கலந்துகொண்ட கேரளக் கல்வியமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பட்டதாரி இளஞர்கள், தங்களுடைய உழைப்பின் மூலம் நாட்டை முன்னேறச் செய்து, உலகில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளுக்கு இணையாக அதை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

"எஞ்சினீயர்கள்கூட இப்போது வேலை கிடைக்காமல் திண்டாடுகிறார்கள்; இந்த நிலை மாற, பட்டதாரிகள், தங்கள் அறிவின் திறமையால் வேலை தேடிக் கொள்ள முயற்சி செய்யவேண்டும்."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

15--10--68

சென்னை 10-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு மாடல் நகர் கலல றைத் திடலில்; தலைவர்: பன்னீர்செல்வம்; பேசுவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, நடிப்சிறை புலவர் கே. ஆர். இராமசாமி, ஆலடி அருணு எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

பெரியகுளத்துப்பாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு; தலைவர்: ந. கருப்பண்ணன்; பேசுவோர்: நன்னிலம் அ. ரபராசன், ரெ. ரு. இராமசாமி, அ. அம்மையப்பன், பரமத்தி சண்முகம்.

குருக்கத்தி

உழவர் மன்றம் துவக்க விழா; மாலை 6 மணிக்கு; தலைவர்: வை. உத்தண்டி; பேசுவோர்: கோ.சி. மணி எம்.எல்.சி., கே. வி. இராமையர், சு. தென்கோவன், எஸ். தியாகராசன், எஸ். விசுவநாதன், பொ. கணபதி, கோ. சிங்காரம், மற்றும் பலர்.

மருத்துவமனையில் புதுவை சண்முகம்

புதுவை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் எம். ஏ. சண்முகம், உடல்நிலை காரணமாக சென்னை பூவிருந்தவல்லி நெடுஞ் சாலையில் உள்ள மேலு மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை பெற்று வருகிறார்.

முன்னாள் புதுவை முதல்வர் பருக் மரைக்காயர்

கருணாநிதி முன்னிலையில் கழகத்தில் சேர்ந்தார்

சென்னை, அக். 14—

முன்னாள் புதுவை முதலமைச்சரும், சட்டமன்ற அவைத் தலைவருமான பருக் மரைக்காயர், நேற்று சென்னை 58-வது வட்டத்தில் கடைபெற்ற பொதுக் கூட்டத்தில், பொதுப்பணி அமைச்சரும் கழகப் பொருளாளருமான திரு. கருணாநிதி அவர்கள் முன்னிலையில், தலைமைக் கழக உறுப்பினராகத் தம்மைப் பதிவு செய்துகொண்டார்.

கையெழுத்திட்ட தமது உறுப்பினர் பத்திரத்தை, பொருளாளர் கருணாநிதி அவர்களிடம் பருக மரைக்காயர் ஒப்படைக்கையில், வெள்ளம்போல் திரண்டிருந்த மக்கள் கையொலி எழுப்பி வரவேற்பையும்--மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொண்டனர்.

தாம் கழகத்தில் சேருவது தற் காலிகமான முடிவல்ல என்றும், இரண்டு மாதங்களுக்கு முன்பே கருணாநிதி அவர்களிடம் தாம் அதுப்றறிக் கருத்துத் தெரிவித்த தாகவும், இரண்டுமாத காலம் பொறுத்திருக்குமாறு அவர் சொன்னதாகவும் தெரிவித்த மரைக்காயர், 'தி. மு. கழகம், மக்களைச் சார்ந்திருக்கிற -- மக்கள் நலனில் அக்கறையுள்ள கட்சி; ஆகவேதான், அதனை நான் சார்ந்திருக்கிறேன்' என் ருர்.

கா. அறிவழகன்

எம்.எல்.சி. சுற்றுப்பயணம்

அக். 15: வட சென்னை மாகராட்சி தேர்தல் பொதுக்கூட்டங்கள்.

அக். 16: காலை 10 மணி முதல் 11-30 மணி வரை அரசு உயர்நிலைப் பள்ளி (பாப்பாங்குளம்) உத்திரமேரூர்; காலை 11-30 மணி முதல் 12-30 மணி வரை : மகளிர் உயர்நிலைப் பள்ளி—களியாம்பூண்டி; பிற்பகல் 2 மணி முதல் 3-30 மணி வரை: அரசு உயர்நிலைப் பள்ளி—பெருகரை; மாலை 3-30 மணி முதல் 5 மணி வரை: அரசு உயர்நிலைப் பள்ளி—மாஞ்பதி; இரவு 7 மணி: பெருகர்—பொதுக்கூட்டம்.

அக். 17 காலை 10 மணி முதல் 11 மணி வரை : அரசு உயர்நிலைப் பள்ளி—சாலவாக்கம்; காலை 11 மணி முதல் 12-30 மணி வரை: அரசு உயர்நிலைப் பள்ளி—திருமுக்கூடல்; மாலை 3 மணி முதல் 5 மணி வரை: அரசு உயர்நிலைப் பள்ளி (காவித்தண்டலம்)—ஒரக் காட்டுப்பேட்டை; மாலை 7-மணி: தென் சென்னை தேர்தல் பொதுக் கூட்டங்கள்.

அக். 18: வாலாசாபாத்--காலை 10 மணி: மகளிர் பயிற்சிப் பள்ளி இலக்கிய மன்ற விழா; இரவு 7 மணி: வட சென்னை தேர்தல் பொதுக்கூட்டங்கள்.

நிகழ்ச்சிகளில் தா. வி. அன்புக் கண்ணன் பி.ஏ., அவர்களும் கலந்துகொள்வார்.

கலை நிகழ்ச்சிகள்

சென்னை 20-வது வட்டம்

தி. மு. க. சார்பில் 15—10—68 மாலை 7 மணிக்கு மண்ணடி ஜயப்பசெட்டி தெருவில் சி. சாமிநாதன் தலைமையிலும்-கழக வேட்பாளர் வி. பொன்னுசாமி முன்னிலையிலும் திருவாரூர் முருகு பாண்டியனின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

சென்னை 37-வது வட்டம்

தி. மு. க. சார்பில் 15—10—68 இரவு 9 மணிக்கு அண்ணுபிள்ளை தெருவில், எம். மாக்கீ கலைமையில் குமாரி வசயா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

தங்கராசு -- கண்ணம்மா

கலை நிகழ்ச்சிகள்

அக். 15: இராமாதபுரம்; 16: ஆறகழூர் (ஆத்தூர்); 17: சோவை; 18: மேட்டுப்பாளையம்; 20: புதுக்கோட்டை; 21: குறிஞ்சிப்பாடி; 22, 23, 24, 25: சென்னை மாகராட்சித் தேர்தல் கலை நிகழ்ச்சிகள்.

காவிரித் திட்டம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'திட்டமிடப்படாமலேயே துவக்கி விட்டார்கள்; வீராணம் ஏரியில் ருந்து கொண்டு வருவதா -- ஜேடர்பாளையத்திலிருந்து கொண்டுவருவதா -- கிருஷ்ணகோதாவரியிலிருந்து கொண்டுவருவதா என்பதே முடிவாகவில்லை' என்று கூறியிருக்கிறார்.

பதில் சொல்ல வேண்டிய பொறுப்பிலிருப்பதால் இது பற்றி விளக்கமளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்; ஜேடர்பாளையம் திட்டத்திற்கு ரு. 40-கோடி செலவாகும்; வீராணம் திட்டத்திற்கு ரு. 25-கோடி செலவாகும்.

ஜேடர்பாளையம் திட்டத்திற்கு ரு. 40-கோடி செலவாவது மட்டுமல்ல -- 300-மைல் தூரம் அகன்ற சிமெண்டுக் கால்வாய்களை கால்வாய் அமைக்கவேண்டும். 6-ஆயிரம் ஏக்ருக்குமேல் நில ஆர்ஜிதமும் செய்தாக வேண்டும். சென்னியின்மீது அக்கறையுள்ளவர்களாக இருந்தால் விட்டுக் கொடுப்பார்கள்; ஆனுல், வேறு நோக்கத்தோடு ஒருவர் நில ஆர்ஜிதம் செய்வதை எதிர்த்து வழக்குப் போட்டாலும் கீழ்க் கோர்ட்டு -- மேல் கோர்ட்டு என்றாலே போனுல் கால தாமதமாகிவிடும்; ஆகவே, 'ஜேடர்பாளையம் திட்டம் இப்போது முடியாது' என்று கைவிட்டோம்.

வீராணத்திலிருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு வாய்க்கால் கட்டத் தேவையில்லை; குமாய்கள் போதுமானவை; 400-ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்தால போதும் என்று திட்டம் மிடப்பட்டது.

இத்திட்டத்திற்கென ரூ. 25 கோடி ஒதுக்கப்பட்டு, முன் செலவுகளுக்காக ரு. 5-இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ரு. 25-கோடி என்ரும், மத்திய அரசுத் திட்டமாகிவிடலாம்; ஆகவே, இந்த ரு. 25-கோடியை மாநில அரசே ஏற்பது என்று முடிவாகி ஆரம்ப வேலைகள் துவங்கிவிட்டன.

முகவரி

கா. காளிமுத்து பி.ஏ.,
மே/பா. இலக்குமி நாராயணன் பி.ஏ. (பி.எல்.)
113, சட்டக் கல்லூரி விடுதி,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

நாவளவன்,
100, வெள்ளாளத் தெரு,
புரசைவாக்கம், சென்னை-7.

சேலம் முன்சேற்ற ழ கழகத்தினரை. இது. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், வெளியீடு பொதுவாகவும், அரசியுவராகவும் கொண்டு மதுரை அச்சகத்தில் (24, ஜெய்ஹிந்துபுரம் மெய்ந்த தெரு, சென்னை-31) அரசு வெளியிடுகிறார்